# பாதுகாத்தலுக்கும் வாய்ப்புக்கும் ஒரு திட்டம்




செய்திகள்

March 28, 2018

## பாதுகாத்தலுக்கும் வாய்ப்புக்கும் ஒரு திட்டம் வழங்குதல்

### ஒன்டாரியோ தொடர்ந்து உடல் நலம் காத்தல், குழந்தை பராமரிப்பு மற்றும் மன நலம் காத்தல் அவற்றில் முதலீடு செய்து வருகிறது

இன்று அரசாங்கம் உடல் நலம் காத்தல், குழந்தை பராமரிப்பு, வீட்டில் நலம் காத்தல் மற்றும் மன நலம் காத்தலில் விசேஷ புதிய முதலீடுகளை உட்படுத்திய, மற்றும் மாநிலத்தில் உள்ள மக்களுக்கு மேலும் வேலை வாய்ப்புகள் உருவாக்கும் படிகள் எடுக்கும் தன் 2018 பட்ஜெட் – ஐ வெளியிட்டுள்ளது. இந்த பட்ஜெட் வாழ்க்கையை மேலும் செலவுதிறனுக்குள்ளாக்கும் மற்றும் துரிதமான பொருளாதார மாற்றங்கள் கொண்ட காலத்தில் அதிக பண பாதுகாப்பு அளிக்கும் முயற்சிகளில் கவனம் செலுத்துகிறது.

ஒன்டாரியோவின் பொருளாதாரம் வலுவாகிக்கொண்டிருக்கிறது, வேலையின்மை விகிதம் கடந்த இருபது ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவில் உள்ளது. இருப்பினும் வாழ்வு செலவு அதிகரிப்பினால் மற்றும் நிலையான நீண்ட கால வேலை கிடைப்பது கடினமாகிக்கொண்டிருக்கிறதனால், பலர் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் பராமரித்துக்கொள்ள தவிக்கிறார்கள். மாறும் பொருளாதாரம் நம் சமூகத்தில் உள்ள இடைவெளிகளை அகலமாக்கி வரும் நிலையில், மாநிலத்தில் அனைவரும் முன்னேற தேவையான கவனமும் வாய்ப்பும் பெற ஆதரித்து அரசாங்கம் நியாயமான மேம்பட்ட ஒன்டாரியோவை கட்ட திட்டமிட்டிருக்கிறது.

சார்ல்ஸ் ஸூஸா, நிதி அமைச்சர், இன்று சட்டமன்றத்தில் பட்ஜெட்டை அறிமுகப்படுத்தினார். நிறைவேற்றப்பட்டால், 65 வயது மேலானவர்களுக்கு ஓஹிப்+(OHIP+), இலவச மருந்துக் குறிப்பு மருந்துகளுடன், மன நலம் மற்றும் போதை சேவைகளை, மற்றும் இரண்டரை வயது முதல் கிண்டர்கார்டன் செல்ல தகுதியாகும் வரை குழந்தைகளுக்கு இலவச முன்நிலை பாலர் பராமரிப்பு (preschool) ஒன்டாரியோ மேம்படுத்தும்.

## பாதுகாத்தலில் முதலீடு செய்தல்

தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பெருகிவரும் அழுத்தங்களை எளிதாக்க உதவவும், தங்கள் அன்பார்ந்தவர்களை கவனிக்க எவ்வொரு வாய்ப்பை அளிக்கவும் ஒன்டாரியோ:

- புதிய முதியோர்களுக்கான ஆரோக்கிய இல்லம் திட்டத்தை அறிமுகப் படுத்துகிறோம். இத்திட்டம் வயது முதிந்தவர்கள் வீட்டில் வசிக்கும் செலவுகளை கருத்தில் கொள்கிறது, அவர்களுக்கு பிடித்த இடத்தில். 75 வயதுக்கு மேலான முதியோரால் நடத்தப்படும் தகுதி பெற்ற வீடுகளுக்கு அவர்கள் தானே வாழ உதவவும் வீட்டு பராமரிப்பு செலவுகளில் உதவவும் $750 வரை அனுகூலம் வழங்குகிறது.
- புதியதொரு Ontario Drug and Dental திட்டம் அறிமுகப்படுத்தல், வேலையிட உடல்நல அனுகூலங்கள் இல்லாதோருக்கு அல்லது OHIP+ அல்லது மற்றைய அரசாங்க திட்டங்களின் சலுகை இல்லாவிட்டால், ஆண்டுதோறும் 80% வரை , $400 திருமணமாகாதவர்களுக்கும், $600 ஜோடிகளுக்கும், இரண்டு குழந்தையுடைய நான்கு உறுப்பினர் உள்ள குடும்பங்களுக்கு $700-ம் ,தகுதியுள்ள மருந்துக்குறிப்பு மருந்து மற்றும் பல் மருத்துவ கட்டணங்கள் திருப்பிக்கொடுக்கப்படும்.
- இரண்டரை வயது முதல் கிண்டர்கார்டன் செல்ல தகுதியாகும் வரை இலவச முன்நிலை பாலர் பராமரிப்பு மூலம் மேலும் மலிவான தரமான பாலர் பராமரிப்பு அளித்தல். ஒரு குழந்தை உள்ள ஒரு குடும்பத்துக்கு சராசரி $17,000 சேமிப்பு, முழு நாள் கிண்டர்கார்டன் மூலம் குடும்பங்கள் பெறும் சேமிப்பின் மேல் சேமிப்பு. ஆரம்ப கால கல்வி கற்றல் குழந்தைகளின் கல்வி செயல்திறனை வாழ்நாள் தோறும் மேம்படுத்துவதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.
- ஒன்டாரியோ முழுக்க ஆயிரமாயிரமான குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் வயதடைந்தவர்களுக்கு மேம்பட்ட துரிதமான மன நலம் மற்றும் போதை சேவைகள் அணுகதல் வழங்குவது - நான்கு ஆண்டுகளில் மொத்த மானியம் $17 பில்லியனுக்கு மேல் வரை.
- 2018-19ல் கூட $822 மில்லியன் முதலீடு மூலம் காத்தலுக்கு மேம்பட்ட அணுகலும், காத்திருக்கும் நேரத்தை குறைக்கவும், தொகுதி திறன் பிரச்சினைகளை தாக்கவும், ஒன்டாரியோவின் வளரும் மற்றும் வயதடைந்தவர் ஜனத்தொகையின் தேவைகளை மேலும் நன்றாக எதிர்கொள்ளவும் – கடந்த பத்து வருடங்களில்

வைத்தியசாலைகளில் அரசாங்கத்தின் ஒரே மிக்க அதிகமான முதலீடு, மருத்துவமனைகளை மேம்படுத்த. மக்களுக்கு கூடுதலாகவும் துரிதமாகவும் உடல்நல கவனம் அளிக்க அடுத்த 10 வருடங்களில் வைத்தியசாலகளை கட்டவும் புதுபிக்கவும் மாநிலம் சுமாராக $19 பில்லியன் முதலீடு செய்யப்போகிறது.

- 30,000 புது நெடு-நேர கவனிப்பு படுக்கைகளை, இதற்கு மேல் தானாக தனியாக வாழ இயலாதவர்களுக்கு -2022-க்குள் 5,000 படுக்கைகளை கூட்டி - அடுத்த 10 வருடங்களில் உருவாக்குவது-நெடு-நேர கவனிப்பு தேவைப்படுவோருக்கு மனநிம்மதி அளித்திட. இந்த புது படுக்கைகள் தற்போதுள்ள 30,000 அபிவிருத்தி செய்யப்படும் படுக்கைகளுக்கு மேலானது.
- பாரபட்சமற்ற சமுதாயத்தை வளர்க்கவும், தேர்வு மற்றும் சுதந்திரத்தை அதிகரிக்கவும் $1.8 பில்லியன் முதலீடு செய்து 47,000 வளர்ச்சி பாதிக்கப்பட்ட வயதடைந்தவர்களுக்கு சேவைகளை வலுப்படுத்துதல், மற்றும் சமூக ஆதரவு அமைப்பை சீர்படுத்தி விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளில் கவனம் செலுத்தாமல் மக்கள் மீது கவனம் செலுத்துதல்.

## வாழ்க்கையை மேலும் செலவுதிறனுக்குள்ளாக்குவது

குடும்பங்கள் பெருகிவரும் அழுத்தங்களை எதிர்நோக்குகிறார்கள்-வேலையிலோ வேலைக்கு போகும்பொழுதோ அல்லது பணப்பையிலோ - இவை மக்கள் வாழ்க்கையையும் நம் அன்புக்குரியவர்களை கவனிக்கும் திறனையும் உண்மையாக பாதிக்கிறது. வாழ்க்கையை மேலும் செலவுதிறனுக்குள்ளாக்கவும் மற்றும் துரிதமான பொருளாதார மாற்றங்கள் கொண்ட காலத்தில் அதிக பண பாதுகாப்பு அளிக்கவும் ஒன்டாரியோ நடவடிக்கை எடுத்திருக்கிறது:

- 65 வயது மேலானவர்களுக்கு மருந்துக்குறிப்புகளை ஓஹிப்+ மூலம் முற்றிலும் இலவசமாக்கி, எந்த மூத்த குடிமக்களும் அத்தியாவச மருந்துகள் இல்லாமல் போகவிடாமல். ஒன்டாரியோ ட்ரக் பெனிபிட் வருடாந்தர கழிவு மற்றும் கூட்டுகட்டணம் நீக்குதலால். இது சராசரி ஒன்டாரியோ முதியவருக்கு ஆண்டுக்கு $240 சேமிப்பு அளிக்கிறது.  இந்த ஓஹிப்+(OHIP+) விரிவாக்கம்*2017*ஒன்டாரியோ பட்ஜெட் 25 வயதுக்கு கம்மியான அனைவருக்கும் இலவச மருந்துக்குறிப்புகளை அறிமுகப்படுத்தியதை அடுத்தது.
- ஜூலை 1,2017 முதல் முதியோர்களுக்கு பொதுபோக்குவரத்து வரி சலுகையால் வருடம் $450 வரை சேமிப்பு அளிப்பதுடன், சராசரி உள்ளூர் பயணிகளுக்கு

வழக்கமான பயணச் செலவை கோ/அப் எக்ஸ்ப்ரெஸ் நெட்வொர்க்குகள் (GO/UP Express network) மற்றும் டிடிசி (TTC) இடையே மாறும்போது சுமாராக வருடம் $720 குறைப்பது.

- ஜூலை 1,2017 முதல் வீட்டு மின் கட்டணத்தை சராசரியாக 25 சதவிகிதம், கிராமப்புற மற்றும் கீழ் வருமான குடும்பங்களுக்கு 40 அல்லது 50 சதவிகிதம் வரை குறைத்தல்.

## மக்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்துவது

வாழ, வேலை செய்ய மற்றும் வியாபாரம் செய்யவும் மாநிலம் சிறந்த இடமாக நிலைநாட்ட மாறிவரும் பொருளாதாரத்தில் மக்கள் பொருந்தி ஓங்கி வளர ஒன்டாரியோ உதவுகிறது.

- அனைத்து வயது 225,000 மேலான மாணவர்களுக்கு கல்லூரி மற்றும் பல்கலைகழக கல்வி கட்டணம் இலவசமாக்குவது. கீழ் அல்ல நடுத்தர வருமாண குடும்ப மாணவர்களுக்கு கல்வி கட்டணம் இலவசமாக அல்லது குறைவாக கிடைக்கிறது; $90,000 வரை சம்பாரிப்பவர்களுக்கு கல்வி கட்டணம் இலவசம், மற்றும் $175,000 வரை சம்பாரிக்கும் குடும்பங்களின் மாணவர்கள்கூட நிதி உதவிக்கு தகுதியானவர்கள்.
- நல்ல வேலைகளுக்கு மாணவர்களை தயாராக்க மாறிவரும் மாணவர் மற்றும் வேலை அளிப்பவர்களின் தேவைகளுக்கு பதிலளிக்கும் மேல் நிலை படிப்புத்திட்டங்களை உருவாக்க மூன்று வருட காலத்தில் $132 மில்லியன் அளித்தல்- உள்ளூர் வேலை அளிப்பவர்களுடன் கூட்டமைப்புகளை வலுப்படுத்துவது, இணக்கமான மற்றும் அனுபவமளிக்கக்கூடிய கற்றல், மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணித பட்டதாரிகளின் எண்ணிக்கையை அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25 சதவிகிதம், 40,000ல் இருந்து 50,000 அதிகரிப்பது, ஆகியன உள்ளடங்கியது.
- அடுத்த 10 வருட காலத்தில் வேலை மற்றும் வளமை நிதியை (Jobs and Prosperity Fund) $900 மில்லியன் அதிகரிப்புடன் புதுப்பித்தும் விரிவாக்கியும் 70,000 வேலைகளை உருவாக்கியும் தக்கவைக்கவும் திட்டமிடல்.
- ஒன்டாரியோ வியாபாரங்கள், மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளை ஆதரிக்கவும், நல்ல உயர் ஊதிய வேலைகளை கவர உதவவும் அடுத்த மூன்று வருடகாலத்தில் நல்ல வேலைகள் மற்றும் வளர்ச்சி திட்டத்தின்(Good Jobs and Growth Plan) மூலம்

புது $935 மில்லியன் நிதி அளித்தல்.

- பாலினங்களிடையே ஊதிய வேற்றுமையை கையாண்டு மற்றும் பணியமர்த்தல் செயல்முறைகளை மேலும் வெளிப்படையாக்கி பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட வேலைகள் ஊதிய விகிதம் அல்லது சம்பள அளவையும் காட்டவேண்டும் என முன்மொழியப்பட்ட சட்டம் நிறைவேற்றப்பட்டால் வேலையிடங்களை அனைவருக்கும் நியாயமாக்கும்.
- குறைந்தபட்ச ஊதியத்தை ஜனவரி 1, 2018 முதல் ஒரு மணி நேரத்திற்கு $14 மற்றும் ஜனவரி 1, 2019 முதல் ஒரு மணி நேரத்திற்கு $15 உயர்த்தி 1.1 மில்லியன் ஒன்டாரியோ மக்கள் வெகு நாட்கள் காத்திருந்த அதிகரிப்பை அளிப்பது.

பொருளாதார நெருக்கடி சமயத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் இம்மாநிலம் தன் நிதி இலக்குகளை தாண்டியிருக்கிறது, மற்றும் 2017–18ல் பட்ஜெட் உபரிதத்ததை எதிர்பார்க்கிறது. 2018–19 ஆரம்பத்திலிருந்து இம்மாநில மக்கள் சார்ந்திருக்கும் கவனிப்பு மற்றும் பணிகளில் முதலீடு செய்ய ஒன்டாரியோ தேர்ந்தெடுத்துள்ளது. அதனால் இம்மாநிலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவான எளிமையான பற்றாக்குறையை ஓட்டும். இம்மாநிலத்தின் நெடுநாளைய பொறுப்பான நிதி நிர்வாக சாதனையின் பெயரில், இந்த பட்ஜெட் 2024–25க்குல் சமநிலை அடைய பாதை வரைவிக்கிறது.

## எடுத்துக்கூறல்

ஒன்டாரியோவின் பொருளாதாரம் வலுவாகிக்கொண்டிருக்கிறது, வணிகங்கள் வேலைவாய்ப்பு படைக்கும் சாதனை புரிகிறார்கள், வேலையின்மை விகிதம் கடந்த இருபது ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவில் உல்லது. நம் பட்ஜெட் சரிசமமாக உள்ளது. $600 மில்லியன் உபரிதம் உள்ளது. இப்பொழுது, நம் வலுவான நிதி நிலையை உபயோகித்து குடும்பங்களுக்கு வாழ்வை மேலும் செலவுத்திறனுக்குள் ஆக்குகிறோம் மற்றும் மாநிலம் முழுதும் வணிகங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறோம். 2018 பட்ஜெட் மேலும் குடும்பங்கள் முன்னேற உதவ, உடல்நல காப்பு,பாலர் பராமரிப்பு மற்றும் முதியோர்கள் காப்பு உட்படும்.

— சார்லஸ் ஸூஸா, நிதி அமைச்சர்

## விரைவு குறிப்புகள்

- உடல்நல காப்பு, கல்வி, குழந்தை பராமரிப்பு, முதியோர்கள், சமூக சேவைகள், பொருளாதாரத்தை வளர்த்தல் மற்றும் நல்ல வேலைகளை உருவாக்குவது போன்ற பகுதிகளில் கவனம் செலுத்தி ஒன்டாரியோ மக்கள் சார்ந்திருக்கும் முக்கிய பொதுபணிகளை ஆதரிக்க, அரசாங்கம் அடுத்த மூன்று ஆண்டுகளில் புதிய $20.3 பில்லியன் முதலீடு செய்ய தேர்ந்தெடுத்துள்ளது.
- பொருளாதார நெருக்கடி சமயத்திலிருந்து, ஒன்டாரியோ பொருளாதாரம் 800,000ம் மேலான மொத்த புது வேலைகளை பெற்றுள்ளது. வேலையின்மை விகிதம் சீராக சரிந்து பிப்ரவரி 2018ல் 17 வருடத்தில் மிகக் குறைந்த அளவை அடைந்தது, மற்றும் தொடர்ந்து 34 மாதங்களாக தேசிய சராசரிக்குக் கீழ் உள்ளது.
- 2014 முதல் ஒன்டாரியோ பொருளாதாரம் கனடா மற்றும் G7 நாடுகள் அனைத்தையும்விட வளர்ந்துள்ளது.

## கூடுதல் ஆதாரங்கள்

- *2018 ஒன்டாரியோ பட்ஜெட்* டை படியுங்கள் *பாதுகாத்தலுக்கும் வாய்ப்புக்குமான ஒரு திட்டம்*
  - அரசாங்கத்திட்டத்தைப் பற்றி மேலும் விவரங்களுக்கு, குறிப்புத் தாள்களை படியுங்கள்
    - ஒன்டாரியோ பட்ஜெட் 2018: முதல் 10 சிறப்பம்சங்கள்
    - தினசரி வாழ்க்கையை மேலும் செலவுதிறனுக்குள்ளாக்குவது
    - அதிக குழந்தை பராமரிப்பு, அதிக தேர்வுகள்
    - ஒன்டாரியோவின் முதியோர்களை பார்த்துக்கொள்வது
    - உடல்நல காத்தலுக்கு இன்னும் வேகமான, மேம்பட்ட அணுகல்
    - *ஒரு* பராமரிப்பு ஒரு திட்டம்
    - ஒன்டாரியோவின் வெற்றி தாகத்தை வளர்க்கவும் நல்ல வேலைகளை உருவாக்குவதும்
    - ஒன்டாரியோவின் பொருளாதார மற்றும் நிதி மேல் கவனம்

**For Media Inquiries Only:**

Jessica Martin, Minister’s Office
jessica.martin@ontario.ca, 416-212-5181

Scott Blodgett, Ministry of Finance
scott.blodgett@ontario.ca, 416-325-0324

**ontario.ca/finance**

*Disponible en français*